பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 23 செவ்வாய்க்கிழமை 08.12.2020 கதிர் 263

## முதலாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மன்னாரில் இன்று மஹிந்த தலைமையில் திறப்பு

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தின் நடுக்குடா பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையம் இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில், 141 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 'தம்பபவனி' காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த 'தம்பபவனி' காற்றாலை மின் உற்பத்தி நிலையம், தேசிய மின்விநியோகக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 2



## கொழும்பில் நேற்று மாத்திரம் 371 பேருக்குத் தொற்று உறுதி

இலங்கையில் நேற்று கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 703 பேரில் 371 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

அவர்களில் பொரளைப் பகுதியில்192 பேரும், கொம்பனி வீதியில் 32 பேரும் மற்றும் தெமட்டகொட பகுதியில் 32 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2

## இடைக்கால அறிக்கை நாளை நாடாளுமன்றில்!

### சிறைச்சாலைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால விசாரணை அறிக்கை நாளை சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் என சிறைச்சாலைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்தார். 2

### ஈஸ்டர் தாக்குதல் பிரதான சூத்திரதாரி சஹ்ரானிடம்

# தற்கொலைத் தாக்குதல் பயிற்சி: மட்டக்களப்பில் 6 பெண்கள் கைது

### தாய், 3 மகள்மார், 2 மருமகள்மாரே சிக்கினர்

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசீமிடம் தற்கொலைத் தாக்குதல்கள் உட்பட்ட பல்வேறு பயிற்சிகளைப் பெற்றார்கள் என்ற சந்தேகத்தில் 6 பெண்கள் மட்டக்களப்பு - காத்தான்குடியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.** 2



## அரசியல் பழிவாங்கல்கள் விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையை அந்த 2

## எகிறும் தொற்றாளர்கள் எண்ணிக்கையால் மருத்துவக் கட்டமைப்பும் முடங்கும் அபாயம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் 6 மணி நேரத்துக்கு ஒருவர் மரணிக்கின்றனர். நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. எனவே, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தாவிடின் நாட்டின் வைத்தியசாலை கட்டமைப்பும் ஸ்தம்பிதமடையக்கூடிய அபாயம் இருக்கின்றது.

- இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து 2

## 'கொரோனா' தாண்டவத்தில் 37 நாள்களில் 122 பேர் சாவு!!

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் கடந்த 37 நாள்களில் (நவம்பர் 01 முதல் டிசம்பர் 07 வரை) 122 பேர் சாவடைந்துள்ளனர்.

அதேவேளை, நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் நேற்றிரவு வரை 25 ஆயிரத்து 25 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. 2

### 'மொட்டு' தலைமையிலான அரசின்

## '20' ஐ ஆதரித்த முஸ்லிம் எம்.பிக்கள் 'பட்ஜட்' வாக்கெடுப்பில் நழுவ முடிவு!

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு எதிர்வரும் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

'மொட்டு' அரசின் முதலாவது பட்ஜட் கடந்த நவம்பர் 17ஆம் திகதி நிதி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. நவம்பர் 18 ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்று அன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 2

## மஹர சிறைக் கலவரம் தொடர்பான இடைக்கால அறிக்கை கையளிப்பு



மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய விசாரணைக்குழு, நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் இடைக்கால விசாரணை அறிக்கையைக் கையளித்துள்ளது.

மஹர சிறைச்சாலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற மோதலால் 11 கைதிகள் உயிரிழந்தனர். சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் உட்பட 117 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நீதி அமைச்சரால் 2



## ஆயுர்வேத மருந்தைப் பெறுவதற்காக சமூக இடைவெளியை மறந்த மக்கள்!

### பெருமளவானவர்கள் திரண்டதால் பதற்றம்; பொலிஸார் குவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றுக்கான ஆயுர்வேத மருந்து எனக் கூறப்படும் மருந்தைப் பெற்றுக் கொள்வதற்கு பெருமளவானவர்கள் திரண்டதால் கேகாலைப் பகுதியில் பெரும் நெருக்கடி நிலைமை இன்று உருவானது.

சமூக இடைவெளியை பின்பற்றாது, ஆயுர்வேத மருந்தை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் திரண்டதால் பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கான ஆயுர்வேத மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டு, அந்த மருந்து தொடர்பான மூன்றாம் கட்ட ஆய்வுகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. 2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## 'கொரோனா' தாண்டவ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவர்களில் இதுவரையில் (ஒக்டோபர் 22 முதல் நேற்று வரை) 129 பேர் பலியாகியுள்ளனர்.

மினுவாங்கொட கொத்தணி மூலம் 3 ஆயிரத்து 59 பேருக்கும், பேலியகொட கொத்தணிமூலம் 21 ஆயிரத்து 259 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர். நேற்று மாத்திரம் 703 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

அதேவேளை, இலங்கையில் நேற்று வரை மொத்தமாக 28 ஆயிரத்து 580 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் 20 ஆயிரத்து 804 பேர் குணமடைந்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேற்றும் இருவர் உயிரிழந்தார். இதன்படி இலங்கையில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 142 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்களாவர்.

## '20' ஐ ஆதரித்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசும், அதன் தோழமைக் கட்சிகளும் ஆதரித்து வாக்களித்தன. ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணிகள் எதிர்த்து வாக்களித்தன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் நால்வர், 'பட்ஜட்' தொடர்பான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலத்தை அடக்கம் செய்வதற்குத் தொடர்ச்சியாக அனுமதி மறுக்கப்படுவதாலேயே அவ்வாறானதொரு முடிவை ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் எடுத்திருந்தனர். எனினும், 20 ஐ ஆதரித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 'பட்ஜட்'டுக்கும் நேசக்கரம் நீட்டினர்.

ஆனால், வரவு - செலவுத்திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் 'பட்ஜட்'டை எதிர்க்கக் கூடும் எனத் தெரியவருகின்றது.

'பட்ஜட்'டை நிறைவேற்றிக்கொள்வதற்கு சாதாரண பெரும்பான்மை போதுமாதனது. எனவே, எதிரணியின் ஆதரவு ஆளுங்கட்சிக்கு அவசியமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, வரவு - செலவுத் திட்டத்தில் எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 10ஆம் திகதி சபைக்கு அறிவிப்பார்.

## மஹர சிறைக் கலவரம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தன தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது.

ஒருமாதத்துக்குள் முழுமையானதொரு அறிக்கையையும், ஒரு வாரத்துக்குள் இடைக்கால அறிக்கையொன்றையும் முன்வைக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்தநிலையிலேயே நேற்று அறிக்கை கையளிக்கப்பட்டது.

அதேவேளை, மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியினரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆயுர்வேத மருந்தைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கேகாலைப் பகுதியிலுள்ள ஆயுர்வேத வைத்தியரான தம்மிக்க பண்டாரவே இந்த மருந்தைக் கண்டுபிடித்துள்ளார்.

இன்று மருந்து இலவசமாக வழங்கப்படும் எனக் கூறப்பட்ட நிலையிலேயே பெருமளவானவர்கள் சென்றிருந்தனர். பாதுகாப்புப் படையினர், பிக்குகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவானவர்கள் அங்கு திரண்டிருந்தனர்.

## எகிறும் தொற்றாளர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியிட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதம செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே மேலும் கூறியவை வருமாறு:-

கொரோனா வைரஸ் தாக்கத்தால் குளிர் காலமான டிசெம்பர் மாதம் அவதானம் மிக்க காலப்பகுதி என உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் குளிர் காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

அமெரிக்காவில் 5 நாள்களில் 10 இலட்சம் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆயிரமாக இருந்த மரண எண்ணிக்கை 2 ஆயிரம் என்ற கட்டத்துக்குச் சென்றுள்ளது. வைத்தியர்கள்கூட மக்களின் மரணங்களைக் கண்டு கதறியழும் காட்சிகளையும் கண்டோம்.

இலங்கையும் இன்னும் எச்சரிக்கையான - அவதானம்மிக்க கட்டத்திலேயே இருக்கின்றது. ஆனாலும், நிலைமையைக் கட்டுப்படுத்தக்கூடிய சாத்தியமும் இருக்கின்றது. அதற்கு பொதுமக்கள் தரப்பில் இருந்து முழுமையான ஒத்துழைப்பு அவசியமாகும்.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் ஆரம்பம் வரையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆகவே காணப்பட்டது. தற்போது அந்த எண்ணிக்கை 142 ஆக அதிகரித்துள்ளது. நவம்பரில் மட்டும் 98 பேர் வரை உயிரிழந்துள்ளனர். அதாவது 6 மணிநேரத்துக்கு ஒருவர் மரணிக்கின்றனர். சில நாள்களில் 3 மணிநேரத்துக்கு ஒரு மரணம்கூட நிகழ்கின்றது.

நாளொன்றுக்கான தொற்றாளர்களின் எண்ணிக்கையும் 200 என்ற கட்டத்திலிருந்து 600 ஆக அதிகரித்துள்ளது. சிகிச்சை பெறும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை 7 ஆயிரத்துக்குள் வைத்திருந்து சவாலை எதிர்கொண்டு வருகின்றோம்.

நாளொன்றில் குணமடைபவர்களின் எண்ணிக்கை 300 - 400 ஆக இருக்கின்றபோது தொற்றாளர்களின் எண்ணிக்கை 700 - 800 என்ற கட்டத்துக்குச் சென்றால் நிலைமையைச் சமாளிக்க முடியாது. வைத்தியசாலை கட்டமைப்பு ஸ்தம்பிதமடைந்துவிடும்.

எனவே, சாதகம், பாதகம் என்பது மக்களின் கைகளிலேயே இருக்கின்றது. அதனால்தான் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுமாறு கோருகின்றோம். அநாவசியமாக வீடுகளிலிருந்து வெளியேறுவதைத் தவிர்க்கவும். முடிந்தளவு கூட்டங்களை இணையம் மூலம் நடத்தவும். கடைகளுக்குச் செல்லும்போது மாற்றிய பணங்களை எடுத்துச் செல்லவும்.

அட்டுலுகம, பண்டாரகம ஆகிய பகுதிகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும் - என்றார்.

## அரசியல் பழிவாங்கல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் இன்று முற்பகல் கையளித்துள்ளார்.

மூன்று தொகுதிகளாகவுள்ள குறித்த விசாரணை அறிக்கை 2 ஆயிரத்து 43 பக்கங்களைக் கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதம் 09 ஆம் திகதி அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அரச மற்றும் தனியார் கூட்டு நிறுவனங்களில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு தகவல்களைத் திரட்டுவதற்காக இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேரத்னவின் தலைமையிலான இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சந்திர ஜயதிலக்க மற்றும் ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் உறுப்பினர்களாகச் செயற்பட்டனர்.

## தற்கொலைத் தாக்குதல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பிலிருந்து சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளே குறித்த கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பெண்ணொருவரும் அவரது 3 மகள்மாரும், இரு மருமகள்மாரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நேற்று, கொழும்பிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்துக்கு மேலதிக விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அண்மையில், மட்டக்களப்பு விசேட பொலிஸ் குழுவினர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து நடத்திய விசேட நடவடிக்கையில் 20 வயதான இளைஞர் ஒருவரைக் கைதுசெய்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து முன்னெடுத்த விசேட விசாரணைகளில், வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய இந்த 6 பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஏற்கனவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த 6 பெண்களும் கைதுசெய்யப்பட்ட விவகார விசாரணைகளில் ஏற்கனவே 15 ஆண்களும் மூன்று பெண்களுமாக 18 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தநிலையிலேயே தற்போது மேலும் 6 பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவித்தன.

தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களிடம், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்கவின் மேற்பார்வையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பிரசன்ன அல்விஸின் ஆலோசனைக்கமைய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## இடைக்கால அறிக்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் இன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையில் -

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பாக ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது என நீதி அமைச்சர் சபைக்கு அறிவித்திருந்தார்.

அந்த குழுவின் அங்கத்தவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டிருந்தார். எனினும், குறித்த குழுவின் அங்கத்தவராக இருக்கக்கூடிய நீதித்துறையுடன் தொடர்புபட்ட உறுப்பினர், குறித்த விசாரணை தொடர்பான தனது நிலைப்பாட்டை ஊடக சந்திப்பொன்றில் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றார். விசாரணைக் குழுவின் உறுப்பினர் ஒருவர் இவ்வாறு தனிப்பட்ட கருத்துக்களை ஊடகங்களுக்கு முன்னால் வந்து தெரிவிப்பதால் அந்த விசாரணையின் சுயாதீனத்தன்மையை எதிர்பார்க்க முடியுமா? விசாரணை பக்கச்சார்பின்றி இடம்பெறவேண்டும் என்றே நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கை நீதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கையில் இருக்கும் சில விடயங்களையே குறித்த அங்கத்தவர் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். இடைக்கால விசாரணை அறிக்கை நாளை சபைக்கு நீதி அமைச்சரால் முன்வைக்கப்படும். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதனைப் பார்த்துக்கொள்ளலாம் - என்றார்.

## முதலாவது காற்றாலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன் முதல் நடவடிக்கையாக, இவ்வாரம் முதல் 100 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் விநியோகக் கட்டமைப்பில் இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் ஒரு வருடத்துக்கும் குறைவான காலப்பகுதியில் இந்த காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், இந்த மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக ஒரு அலகு மின்சாரத்தை 8 ரூபா என்ற குறைந்த செலவில் உற்பத்தி செய்துக்கொள்ள முடியும் எனத் திட்டத்தின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு அதிகாரி வேலு சந்ரேஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கே.திலீபன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், மன்னார் மாவட்ட அரச அதிபர் நந்தினி ஸ்ரான்லி ஆகியோர் கலந்துகொண்டனர்.





## கொழும்பில் நேற்று .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன்படி கடந்த ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை கொழும்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 706ஆக உயர்ந்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் நேற்று 102 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 51 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 51 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 46 பேரும் நேற்று தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் 25 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 22 பேரும், காலி மாவட்டத்தில் 05 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 05 பேரும், அநுராதபுரம் மாவட்டத்தில் 02 பேரும் நேற்று தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குருநாகல், மாத்தளை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதம் தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் மேலும் தெரிவித்துள்ளது

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சுயாதீன விசாரணை அவசியம்

மஹர சிறைச்சாலைக் களேபரத்தில் கைதிகள் உயிரிழந்தமை அல்லது படுகொலையுண்டமை தொடர்பில் சில கருத்துக்களை ஜே.வி.பியையும் உள்ளடக்கிய மக்கள் சக்தி இயக்கம் வலியுறுத்தியிருக்கின்றது.

கைதிகள் குற்றமிழைத்தவர்களாக இருக்கலாம். அல்லது சுத்தவாளிகளாக இருக்கலாம். அல்லது சந்தேகத்தின் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களாக அல்லது விளக்கமறியல் வைக்கப்பட்டவர்களாக இருக்கலாம்.

எப்படியாயினும், சட்டத்தின் கீழ் நீதித்துறைஉத்தரவுப்படி, ஒருவர் தடுத்து வைக்கப்படும் போது – சமூகத்தின் பிற தரப்புகளில் இருந்து வல்வந்தமாகப் பிரித்தெடுத்து தடுத்து வைக்கப்படுகின்றபோது அத்தகையவரின் பாதுகாப்புக்கு அந்த நீதித்துறையே பொறுப்பு.

நீதித்துறையின் காவலில் இருக்கும்போது அத்தகையோருக்கு ஏற்படக் கூடிய பாதுகாப்புக்கு நீதித்துறையே – அரசே – பொறுப்புக் கூற வேண்டும். வெறுமனே சிறைக் கலவரம் – களேபரம் – என்று கூறித் தப்பி விட முடியாது.

எட்டாயிரம் பேர் தடுத்து வைக்கப்படக் கூடிய சிறைகளில் 27 ஆயிரம் பேரைத் தடுத்து வைத்து, கொரோனா பரவக் கூடிய தொழிற்சாலையாக அது மாறக் கூடிய நிலைமைக்கு விட்டு வைத்தமைக்கு இன்னும் ஒரு தரப்பும் பொறுப்பேற்காதமை பெரும் தவறாகவே முன்னிற்கின்றது.

பதினொரு கைதிகள் உயிரிழந்திருக்கின்றனர். நூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்திருக்கின்றனர். பெருமளவு சொத்துக்கள் இழக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் விவகாரம் குறித்து அரச நிர்வாகம் நேரத்துக்கொரு புதுக் கதை – புளுடா – விடுகின்றது. அவற்றில் பல நம்ப முடியாதவையாகவும் இருக்கின்றன.

சிறை ஆஸ்பத்திரியைக் கைதிகள் தாக்கி சில மருந்துகளைக் கைப்பற்றினர் என்றும், அவற்றை உட்கொண்டமையால் கைதிகள் கிளர்ச்சியுற்று, இப்படி மோசமான மோதல்களில் – படுகொலைக் களேபரங்களில் – ஈடுபட்டனர் என்றும் கூட அரசுத் தரப்பினால் ‘கதை’ அவிழ்த்து விடப்பட்டது.

ஆனால், அந்தக் கதையை மருத்துவரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன மறுத்துரைத்துள்ளார். கொலைகாரர்களைப் பாதுகாக்க அரசு இப்படி பொய்யுரைக்கின்றது என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

மேற்கத்திய மருந்துகளில் எங்கும் போதை தரும் மாத்திரைகள் இல்லை. அப்படி எதுவும் ஆஸ்பத்திரிகளில் இருக்கவும் மாட்டா என்ற உண்மையைப் போட்டுடைத்திருக்கின்றார் அவர்.

போதை நிலைமையை இல்லாதாக்குவதற்கான மாத்திரைகள் இருக்கின்றனவே தவிர, போதையை ஏற்படுத்தும் மருந்துவ மாத்திரை ஏதும் கிடையாது எனவும் அவர் அடித்துக் கூறியிருக்கின்றார்.

இவற்றை நோக்கும்போது, சிறைக் கலவரம் – களேபரம் – மூடு மந்திரமாக நடந்த ‘மாபியா’ நடவடிக்கை போலவே தென்படுகின்றது. அந்த நடவடிக்கையின் பின்னர் அவற்றை மூடி மறைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இன்னும் பாரதூரமானவை போன்று தோற்றுகின்றன.

நாட்டின் நீதித்துறையையும், சட்டம் ஒழுங்கையும் துச்சமென மதித்து ஏமாற்றும் அயோக்கிய தந்திரங்களாகவே இவை தென்படுகின்றன.

இவ்விடயங்களில் நீதியான விசாரணைகள் நடைபெற்று, உண்மைகள் கண்டறியப்பட்டு, சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, குற்றமிழைத்தவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, உரியவர்கள் பொறுப்புக் கூறுவதற்கு உட்படுத்தப்பட்டு, அதன் மூலம் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

அவ்வாறு செய்வது அவசியம் என்பதை தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தியிருக்கின்றது.

அதற்கு உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் ஆணைக்குழு ஒன்றை அமைத்து இந்த விடயங்களை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துதறி விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அமைப்பு கோரியுள்ளது.

மஹர சிறைக்குள் உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பில் முறையான – நேர்மையான – பக்கச் சார்பற்ற – விடயங்களை மூடி மறைக்காத – திறந்த – வெளிப்படையான – நம்பகமான – விசாரணை அவசியம்.

அப்போதுதான் உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும்.

உயிரிழந்தவர்களுக்குக் கொரோனா என்று கூறி, அவர்களின் சடலங்களில் பிரதேச பரிசோதனை கூட நடத்தாமல், எரித்து, எல்லா விடயங்களையும் மூடி மறைக்கும் தந்திரோபாயம் மிக மிக ஆபத்தானது.

அதற்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி வலியுறுத்துவது போல சுதந்திரமான – சுயாதீனமான – நீதியான – விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமித்து இந்த விடயம் குறித்து நியாயமான விசாரணைக்கு அரசு வழி செய்ய வேண்டும்.

மடியில் கனமில்லை எனின் வழியில் பயம் ஏன்?

# ஒவ்வொரு 8 மணிநேரத்துக்கும் ஒருவர் கொரோனாவால் சாவு!

## அரச மருத்துவ சங்கம் தகவல்

நாட்டில் தற்போது ஒவ்வொரு 8 மணி நேரத்துக்கும் ஒருவர் கொரோனா தொற்றால் மரணிக்கின்றனர் என அறிக்கை தெரிவிக்கின்றது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே இதனைத் தெரிவித்துள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு மரணமும் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் நாட்டில் கொரோனா தொற்று மிக வேகமாகப் பரவ கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சுகாதார சேவைகளின் துணை அதிகாரி வைத்தியர் ஹேமந்த ஹெரத், பண்டிகை காலங்களில் பயணத்தைக் கட்டுப்படுத்துமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

# வடக்கு கிழக்கில் சீரற்ற காலநிலை தொடரும்

## வளிமண்டலவியல் திணைக்களம்

வடக்கு, கிழக்கில் நிலவும் சீரற்ற காலநிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கிழக்கு மாகாணத்திலும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் இன்று (செவ்வாய்க்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் எனவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# கடும் அழிவை சந்தித்த நெடுந்தீவு மீனவர்கள்!

புரெவி புயலின் தாக்கத்தை அடுத்து நெடுந்தீவு ஜே – 1 தொடக்கம் ஜே – 6 வரையான கிராம சேவகர் பிரிவுகளில் மீனவர்களின் பல லட்சம் பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்துள்ளன.

112 மீனவ குடும்பங்களின் படகுகள், இயந்திரம், தெப்பம், வலை, களஞ்கட்டி என்பன அழிவடைந்து அசாதாரண சூழ்நிலையால் படகுப் பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

தொடரும் மழை, காரணமாக கரையோரங்கள் கடுமையான அரிப்புக்கு உள்ளாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்களின் படகுகள் கரைகளில் உள்ள கற்பாறைகளுடன் மோதுண்டு பல படகுகள் மிகக் கடுமையான சேதங்களைச் சந்தித்துள்ளன எனவும் படகுகளை பாதுகாப்பாக கட்டுவதற்கும் பாதுகாப்பு அணை வாண் இல்லாமையால் இந்த மீனவர்களது வாழ்வாதார முதலீடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

மேலும் நெடுந்தீவு ஜே – 1 தொடக்கம் ஜே – 6 வரையான கிராம சேவகர் பிரிவுகளில் 829 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் கரையோரங்கள் பாரியளவில் சேதம் அடைந்து மீனவ குடும்பங்கள் பாரிய பாதிப்புக்களைச் சந்தித்துள்ளன எனவும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி தெரிவித்தார்.

# யோகர் சுவாமிகள் பற்றிய ஆவணப்படம் வெளியீடு!





*யாழ்ப்பாணம், டிசெ 08*

ஈழத்துச் சித்தர் தவத்திரு யோகர் சுவாமிகள் பற்றிய ஆவணப்படத்தின் இறுவட்டு வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கொழும்புத்துறையில் அமைந்துள்ள யோகர் சுவாமி சமாதி ஆலயத்தில் இடம்பெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா ஆவணப்படத்தை வெளியிட்டு வைக்க, சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமி ஆகியோர் இறுவட்டுகளைப் பெற்றுக் கொண்டனர்.

மு.சரவணனின் ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பிலும், இ.தனஞ்சயனின் எழுத்து மற்றும் இயக்கத்திலும் இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

# மகாத்மா காந்தியைக் கொன்றவர்களிடம் மேற்குவங்கம் ஒருபோதும் தலைவணங்காது

## மம்தா பானர்ஜி தெரிவிப்பு



மகாத்மா காந்தியை கொன்றவர்களிடம் மேற்கு வங்காளம் ஒருபோதும் தலைவணங்காது என மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

294 தொகுதிகளை கொண்ட மேற்குவங்காள சட்டசபை தேர்தல் 2021 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற உள்ளது.

தேர்தலுக்கு இன்னும் பல மாதங்கள் உள்ள போதும் அரசியல் கட்சியினர் தற்போது முதலே பிரசார கூட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், மேற்குவங்காள முதலமைச்சர் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி நேற்று (திங்கட்கிழமை) பேரணி ஒன்றில் பங்கேற்றார்.

இந்தப் பேரணியில் கலந்துகொண்டு பேசிய மம்தா பானர்ஜி:–

நாம் எவ்வளவு வேலை செய்தாலும், அவை அனைத்துமே மோசமானவை என முத்திரை குத்தப்படுகின்றன.

பி.எம்.கேர்ஸ் நிதி தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை. அது பா.ஜ.க.வினருக்கு மோசமானதாகத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் புயல் பாதிப்பு தொடர்பாக உருவாக்கப்பட்ட கணக்கு விவரங்களைக் கேட்கின்றனர்.

இதேவேளை மகாத்மா காந்தியை கொன்றவர்களிடம் மேற்குவங்காளம் ஒருபோதும் தலைவணங்காது.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஏலூரில் மர்ம நோயால் பாதிப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு!



ஆந்திர மாநிலம் மேற்கு கோதாவரியில் உள்ள ஏலூரில் மர்ம நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

இதன்படி தற்போது குறித்த நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 470 ஐக் கடந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை பொதுமக்கள் திடீரென மயங்கி விழுந்ததுடன், ஏராளமானோருக்கு மூச்சுத் திணறல் மற்றும் வலிப்பு ஆகியவை ஏற்பட்டுள்ளன.

இதன்காரணமாக பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் சிலர் சிகிச்சைக்குப்பின் வீடு திரும்பியுள்ளனர். அத்துடன் ஒருவர் இந்த நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இந்த மர்ம நோய் தொடர்பில் அறிய பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு எய்ம்ஸ் ஆய்வக பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய அரசின் சிறப்புக் குழுவுடன் சேர்ந்து உலக சுகாதார அமைப்பின் குழுவும் ஆய்வு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவால் தேடப்படும் தீவிரவாத தலைவர்கள் சீனாவில் பயிற்சியில்!



இந்தியாவால் அதிகம் தேடப்படும் நாகா பழங்குடியின தீவிரவாதத் தலைவர்கள் மூவர் உள்ளிட்ட நான்கு தீவிரவாதத் தலைவர்கள் சீனாவுக்குச் சென்றுள்ளனர் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பயிற்சிக்காகவும், ஆயுத உதவிக்காகவுமே இவ்வாறு சீனாவுக்கு கடந்த ஒக்ரோபரில் இவர்கள் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின், குன்மிங் பகுதிக்கு இந்த நான்கு தீவிரவாதத் தலைவர்களும் சென்றனர் எனவும், சீன இராணுவ அதிகாரிகளையும், இரு தரப்புக்கும் மத்தியஸ்தராகச் செயற்படும் பிரதிநிதியையும் இவர்கள் சந்தித்தனர் எனவும் இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை, சீனாவால் ஆதரிக்கப்படும் மியான்மரிலுள்ள யூனைடெட் வா ஸ்டேட் ஆர்மி மற்றும் அரகான் ஆர்மி ஆகிய இரு தீவிரவாதக் குழுக்கள், வடகிழக்கு இந்தியாவில் செயற்படும் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆயுத விநியோகம் செய்கின்றன எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹொவிட்சர் ரக பீரங்கி சோதனை

## மகாராஷ்டிராவில் நடந்தது



முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹொவிட்சர் ரக பீரங்கி தொடர்பான சோதனைகள் நடந்து வருகின்றன.

மகாராஷ்டிராவின் அகமதுநகரில் டி.ஆர்.டி.ஓ. எனப்படும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

விரைவில் இந்தப் பீரங்கி இராணுவத்தில் இணைக்கப்பட உள்ளது. ஹோவிட்சர் வகை பீரங்கிகள் 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

# வெகுவாகக் குறைந்தது கொரோனாப் பாதிப்பு!

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்துள்ளது. அந்தவகையில் நேற்று (திங்கட்கிழமை) ஒரேநாளில் 27 ஆயிரத்து 107 பேர் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 97 லட்சத்து 3 ஆயிரத்தைக் கடந்துள்ளது. இவர்களில் 91 இலட்சத்து 77 ஆயிரத்து 645 பேர் குணமடைந்துள்ளனர். அத்துடன் 3 லட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொற்றாளர்கள் அதிகமாகக் குணமடையும் நாடுகளின் வரிசையில் இந்தியா முன்னிலை வகிக்கின்றது.

# கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்ட முதல் இந்தியர் 87 வயதான ஹரி!



ஹரி சுக்லாவுக்கு, ஒரு தொலைபேசி அழைப்பு, அதில் அவர் கொரோனாவுக்கெதிராக தடுப்பூசி போடும் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த செய்தியை கேட்ட ஹரி சுக்லா, இந்தப் பணிக்கான அழைப்பு எனக்குத் தொலைபேசி மூலம் வந்ததும் நான் பதற்றமடையவில்லை. ஏனெனில், உலகையே துன்பத்தில் ஆழ்த்திய இந்த கொடும் வைரஸுக்கு எதிரான போரின் தீர்வுக்கு நானும் உதவுகிறேன் என்பதே எனக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது என்கிறார்.

யார் இந்த ஹரி சுக்லா, இங்கிலாந்தில் கொரோனா தடுப்பூசி போட்ட முதல் மனிதர். 87 வயதான இவர், இந்திய வம்சாவளியும் கூட.

இங்கிலாந்து நாட்டில் கொரோனா வைரஸுக்கான வேக்ஸினை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மனிதர்களுக்கு செலுத்த தொடங்கியுள்ளனர். பெல்ஜியத்திலிருக்கும் ஃபைசர் ரூ பையோண்டெக் ஆராய்ச்சி மையம் இதை உருவாக்கியுள்ளது. முதல் வாரத்தில் எட்டு லட்சம் டோஸ்கள் கிடைக்கும்.

இது தொடர்பாகப் பேசிய இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன், உலகமே அச்சத்துடன் பார்த்த கொடும் கொரோனா வைரஸுக்கு எதிரான மருந்து கண்டுபிடித்ததில் விஞ்ஞானிகளின் பங்கு மகத்தானது. இந்த மருந்தை முதலில் பரிசோதனை முறையில் எடுத்துக் கொள்ளும் மக்களுக்கும் வாழ்த்துக்கள். கொரோனாவுக்கு எதிரான வேக்ஸின் வந்தாலும் கொரோனா ஊரடங்கு இந்த குளிர்காலம் வரையில் தொடர்ந்து அமுலில் இருக்கும். – என்றார்.


# கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1972.08.01
மதம் - இந்து V
நட்சத்திரம் - --------
சூ/ செவ் - 06இல்
பாவம் - -------
கல்வி - A/L
தொழில் - பேக்கரி
எதிர்பார்ப்பு - படித்த பெண்

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1992.10.10
மதம் - இந்து V
நட்சத்திரம் - உத்திரட்டாதி
பாவம் - 18
செவ் - 2இல்
கல்வி - O/L
தொழில் - --------
எதிர்பார்ப்பு – சாதாரண மணமகன்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


# விண்வெளிக்கு இந்திய வீரர்களை அனுப்பும் ககன்யான் திட்டம் மேலும் தள்ளிப்போகலாம்

## இஸ்ரோ தலைவர் சிவன் தகவல்



விண்வெளிக்கு இந்திய வீரர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தை அடுத்த ஆண்டு டிசெம்பருக்குள் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், அது மேலும் ஓராண்டுக்கு தள்ளிப்போகலாம் என இஸ்ரோ கூறியுள்ளது.

ககன்யான் திட்டத்துக்கு முன்னோட்டமாக, ஆளில்லா விண்கலத்தை சோதனை ஓட்டமாக இம்மாதமும், வரும் ஜூலையிலும் செலுத்த திட்டமிடப்பட்டிருந்தது.

கொரோனா பேரிடரால் பணிகளில் ஏற்பட்ட பல்வேறு தாமதம் காரணமாக இந்த சோதனை ஓட்டங்களும், ககன்யான் திட்டமும் தள்ளிப்போகின்றன என இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

சந்திராயன் 3 திட்டத்திற்கு இன்னும் திகதி குறிக்கப்படவில்லை என்றும், வெள்ளிக்கோளை ஆராய்ச்சி செய்யும் சுகன்யான் திட்டத்துக்கான ஆய்வுக் கருவிகள் தொடர்பாக இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்றும் சிவன் கூறியுள்ளார்.

# செயற்கைக்கோளால் இயங்கும் துப்பாக்கியால் ஈரான் அணு விஞ்ஞானி கொல்லப்பட்டுள்ளார்!




ஈரானின் முக்கிய அணு விஞ்ஞானி மோசென் ஃபக்ரிஸாதே, செயற்கைக் கோளால் இயக்கப்படும் துப்பாக்கியால் சுடப்பட்டே கொலைசெய்யப்பட்டார் என ஈரான் தெரிவித்துள்ளது.

இரகசிய அணு ஆயுதத் திட்டத்தின் சூத்திரதாரி என்று மேற்கு மற்றும் இஸ்ரேலிய அரசாங்கத்தால் நீண்டகாலமாகச் சந்தேகிக்கப்படும் ஃபக்ரிஸாதே, கடந்த மாதம் 27ஆம் திகதி தெஹ்ரான் அருகே ஓர் அருகிலுள்ள அப்சார்ட் நகரில் காரில் சென்றுக் கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தநிலையில் இந்த தாக்குதலை, ஈரானின் மத குரு மற்றும் இராணுவ ஆட்சியாளர்கள், இஸ்லாமிய குடியரசின் நீண்டகால எதிரியான இஸ்ரேல் நடத்தியிருக்கலாம் எனக் குற்றஞ்சாட்டுகின்ற போதிலும், இதற்கு ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.

எனினும் 2010 ஆம் ஆண்டு முதல் பல ஈரானிய அணு விஞ்ஞானிகளை, இஸ்ரேல் கொன்றதாக ஈரான் கடந்த காலங்களில் குற்றம் சாட்டியது.

இந்தநிலையில் இது தொடர்பாக ஈரானின் புரட்சிப் படையின் துணை தளபதி கூறுகையில்:-

செயற்கைக் கோள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இயந்திரத் துப்பாக்கியால், ஒரு செயற்கை நுண்ணறிவு இயந்திரம் மூலம் இந்த படுகொலை நடந்தது்ளளது.

இந்த இயந்திரத் துப்பாக்கி, மொசென் ஃபிரிஸாதேவின் முகத்தை மட்டுமே குறிவைத்து சுமார் 13 சுற்றுகள் சுட்டுள்ளது. அவருக்கு அருகிலேயே 25 செ.மீ. தொலைவில் அமர்ந்திருந்த அவரது மனைவிக்கு சிறு காயமும் ஏற்படவில்லை. - எனக் கூறினார்.

வீதியில் ஃபிரிஸாதேவின் கார் சென்று கொண்டிருந்த போது, மரங்களை ஏற்றி வந்த ஒரு லொறி அந்தக் கார் அருகே வந்தது. அப்போது, அந்த லொறியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் வெடிக்கச் செய்யப்பட்டது.

இதனால் மோசென் ஃபக்ரிஸாதே சென்ற கார் நின்றுபோனது. அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு வந்த சுமார் 5 பேர், ஃபக்ரிஸாதேவின் காரை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் அவர் படுகாயமடைந்தார்.

அதனைத் தொடர்ந்து அவரது பாதுகாவலர்களுக்கும் மர்ம நபர்களுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டது. இதில், தாக்குதல் நடத்திய 3 பேர் கொல்லப்பட்டனர் எனவும் சில பாதுகாவலர்கள் காயமடைந்தனர் எனவும் கூறப்படுகிறது. படுகாயமடைந்த ஃபக்ரிஸாதே வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்தார்.

# போப் ஆண்டவர் ஈரான் பயணம்!

போப் ஆண்டவர் பிரான்சிஸ் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஈராக் நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போப்பின் முதல் அமையவுள்ள இந்த பயணம், வத்திக்கான் தனது முன்னோர்களைத் தவிர்த்த ஆபத்தான பயணம் என விவரிக்கப்பட்டுள்ளது.



வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் மேட்டியோ புருனி இது தொடர்பாகக் கூறுகையில்:-

84 வயதாகும் போப்பாண்டவர், தலைநகரான பாக்தாத் மற்றும் உர், ஆபிரகாமுடன் இணைக்கப்பட்ட ஒரு நகரத்தையும், நினிவே சமவெளிகளில் எர்பில், மொசூல் மற்றும் காராகோஷ் ஆகிய இடங்களையும் பார்வையிடுவார். மார்ச் 5ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை இந்த பயணம் அமையவுள்ளது.

ஈராக் அதிகாரிகள் மற்றும் உள்ளூர் கத்தோலிக்க திருச்சபையின் அழைப்பின் பேரில் நடைபெறும் இந்த பயணம் உலகின் தொற்று நோயியல் சூழலில் உலகுக்கான சமாதான செய்தியாக அமையும் எனக் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயால் அவரது வெளிநாட்டு வருகைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்ட ஒரு வருடத்திற்கும் மேலாக அமையும் அவரது முதல் பயணம் இதுவாகும்.

ஈராக் அரசாங்கம் இதுவொரு வரலாற்று நிகழ்வு என்று விவரித்தது. இது ஈராக் மற்றும் முழு பிராந்தியத்துக்கும் சமாதான செய்தியை குறிக்கிறது என்று வெளியுறவு அமைச்சகம் கூறியது.

ஈராக் ஜனாதிபதி பர்ஹாம் சாலிஹ், போப் பிரான்சிசை ஜூலை 2019இல் ஈராக்கிற்கு வருகை தருமாறு அதிகாரபூர்வமாக அழைத்தார். இது பலவருட மோதல்களுக்குப் பிறகு நாடு குணமடைய உதவும் என்று நம்புகிறார்.

2003 ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான படையெடுப்பு மற்றும் 2014இல் நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை இஸ்லாமிய அரசு கைப்பற்றிய பின்னர் குறுங்குழுவாத போரைத் தொடர்ந்து சில லட்சம் கிறிஸ்தவர்கள் ஈராக்கில் எஞ்சியுள்ளனர்.

பிரான்சிஸ் இந்த ஆண்டு ஒரு பயணத்தை மேற்கொள்வார் என்று நம்பினார். ஆனால் அவரது திட்டங்கள் முதலில் பாதுகாப்புக் காரணங்களாலும் பின்னர் கொரோனா வைரஸாலும் ஒத்தி வைக்கப்பட்டன.

2000 ஆம் ஆண்டில், மறைந்த போப் இரண்டாம் ஜான் பால், பண்டைய ஈராக்கிய நகரமான ஊரைப் பார்வையிட விரும்பினார். பாரம்பரியமாக கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் யூத மதம் ஆகிய மூன்று பெரிய ஏகத்துவ மதங்களின் தந்தை ஆபிரகாமின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது. ஈராக், எகிப்து மற்றும் இஸ்ரேலுக்கான மூன்று படிகளின் யாத்திரையின் முதல் கட்டமாக இது இருந்திருக்க வேண்டும்.

ஆனால் அப்போதைய ஈராக் தலைவரான சதாம் ஹுசைனின் அரசாங்கத்துடன் பேச்சு முறிந்தது. இதனால் அவரால் அங்கு செல்ல முடியவில்லை.

# இஸ்லாமியப் பாதுகாப்பு முன்னணியைச் சேர்ந்த அறுவரைக் கொன்ற இந்தோனேஷியப் பொலிஸ்

இந்தோனேஷியாவில் இஸ்லாமிய பாதுகாப்பு முன்னணியைச் சேர்ந்த ஆறு பேர், பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் அந்த அமைப்பை சேர்ந்த மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர் என ஜகார்த்தா பொலிஸ் துறை தலைவர் முகமது ஃபாதில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் விவரிக்கையில்:-

இஸ்லாமிய பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்தவரும், தீவிரவாத கருத்துகளைப் போதிப்பவருமான ரைசிக் ஷிகாப் 3 ஆண்டு நாடு கடத்தப்பட்ட நிலையில், கடந்த மாதம் தடை முடிந்து சவூதி அரேபியாவில் இருந்து மீண்டும் இந்தோனேஷியா திரும்பினார்.

இதனிடையவே அவர் கோவிட்-19 விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் ஜகார்த்தா பொலிஸாரிடம் நேரில் விளக்கமளிக்க திங்கட்கிழமை ஷிகாப் காரில் சென்றார். அவரது அமைப்பைச் சேர்ந்த ஆதரவாளர்கள் 10 பேர் மற்றொரு காரில் பாதுகாப்புக்காக பின்னால் சென்றனர். இதையடுத்து, பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அவர்களைப் பின் தொடர்ந்து கண்காணித்தனர்.

பொலிஸார் பின்தொடர்வதை அறிந்த அவர்கள், ஒருகட்டத்தில் காரைவிட்டு இறங்கி துப்பாக்கி மற்றும் வாள்கள் மூலம் பொலிஸாரை தாக்க முற்பட்டனர். இதையடுத்து, பொலிஸார் பதிலடித் தாக்குதல் நடத்தினர். இதன்போதே அவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகினர். - எனக் கூறினார்.

இந்தோனேஷியாவில் இஸ்லாமிய பாதுகாப்பு முன்னணி அரசியல் அமைப்பாகவும் செயற்பட்டு வந்தபோதிலும் பிற மதக் குழுக்கள், மேற்கத்திய நாடுகளின் தூதரகங்கள், இரவு விடுதிகள் உள்ளிட்ட இடங்களைத் தாக்குவது, சூறையாடுவது என வன்முறையில் ஈடுபடும் ஆயுதக் குழுவினரும் அதில் உள்ளனர். அந்நாட்டில் இஸ்லாமிய சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதே அந்த அமைப்பின் முக்கிய கொள்கையாக உள்ளது.

# உலகையே அச்சுறுத்தும் மர்மத் தூண்கள் 6 ஆவது தங்கநிற தூண் கொலம்பியாவில்!

உலகின் பல பகுதிகளில் அடுத்தடுத்து கண்டுபிடிக்கப்படும் மர்மமான தூண்கள் வரிசையில் 6 ஆவது மர்ம தூண் கொலம்பியா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மர்ம தூண்கள் அனைத்தும் வெள்ளி நிறத்தில் இருந்த நிலையில், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தூண் தங்க நிறத்தில் உள்ளது.

இந்த தூண் கொலம்பியாவில் உள்ள சியா நகராட்சிக்கு உட்பட்ட காட்டுப்பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து கண்டுபிடிக்கப்படும் இந்த மர்ம தூண்கள் ஏலியன்கள் எனப்படும் பிறவுலகத்தவரால் நிறுவப்பட்டவையா, அல்லது ஏதேனும் குழுக்களால் மக்களை பயமடையசெய்யும் நோக்கத்தோடு திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றவை என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அமெரிக்காவின் யூட்டா பாலைவனத்தில் முதன் முறையாக மர்மமான முறையில் நிலைநிறுத்தப்பட்டிருந்த உலோக தூண் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அதுபோன்ற நிகழ்வு உலகின் பல பகுதிகளில் தொடர்ச்சியாகக் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் யூட்டா மாகாணத்தில் உள்ள பாலைவன பகுதியில் கடந்த 18 ஆம் திகதி வனத்துறை அதிகாரிகள் ஹெலிகொப்டர் மூலம் ஆய்வு செய்துகொண்டிருந்தபோது, அந்த பாலைவன பகுதியின் மையத்தில் பளபளப்பான வெளிச்சத்தில் ஓர் உலோகத்தூண் நிறுவப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.



இந்த தூணை யார் நிறுவியது, எப்படி இந்த தூண் இங்கு கொண்டுவரப்பட்டது என எந்த விவரமும் அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருந்தது. அந்த தூண் கண்டுபிடிக்கப்பட்ட சில நாட்களில் மர்மமான முறையில் மாயமானது.

இந்த ஆண்டை ஆட்டிப்படைக்கும் கொரோனா பரவலுக்கு மத்தியில் பாலைவனத்தின் நடுவே உலோக தூண் மர்மமான முறையில் செங்குத்தாக நிலைநிறுத்தப்பட்டிருந்த சம்பவம் இந்த ஆண்டு இறுதிப் பகுதியை மேலும் பதற்றம் அடையச் செய்தது.

அந்த புகைப்படம் சமூகவலைத் தளத்தில் பரவத் தொடங்கியதையடுத்து உலகம் முழுவதிலும் இருந்தும் பலர் இது ஏலியன்கள் பூமிக்கு வருவதற்கான அறிகுறி என இணையதளத்தில் பதிவிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், யூட்டா பாலைவனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தூணை போன்று உலகின் பல்வேறு நாடுகளிலும் கடந்த சில நாட்களாக மர்மமான முறையில் நிறுவப்பட்ட தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி முதல் மர்ம தூண் நவம்பர் 18 ஆம் திகதி அமெரிக்காவின் யூட்டா பாலைவனத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ருமேனியா நாட்டின் பட்ஹா டொம்னி மலைப்பகுதியில் 2 ஆவது மர்ம தூண் கண்டுபிடிக்கப்பட்டது.

3 ஆவது மர்ம தூண் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள பைன் மலைத்தொடர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் பின்னர் இங்கிலாந்து நாட்டில் உள்ள ஐஸ்லி ஆப் வெயிட் என்ற தீவில் உள்ள கடற்கரையில் முக்கோண வடிவிலான 4 ஆவது மர்ம தூண் கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நெதர்லாந்து நாட்டில் உள்ள அவுண்ட் ஹூரின் என்ற நகரில் உள்ள காட்டுப்பகுதியில் 5 ஆவது மர்ம தூண் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த தூணை நாங்கள் தான் நிறுவினோம் என அமெரிக்காவை சேர்ந்த 'தி மோஸ்ட் பேமஸ் ஆர்ட்' என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில், 6 ஆவது மர்ம தூண் கொலம்பியா நாட்டில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# வடமாகாண வைத்தியசாலைகளுக்கு 101 வைத்தியர்கள் புதிதாக நியமனம்!

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

வடக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு 101 வைத்தியர்களுக்கான நியமனம் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பு சுகாதார அமைச்சால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்களில் 27 வைத்தியர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கும் 20 வைத்தியர்கள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் ஏனையவர்கள் ஏனைய மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தவிர்ந்த அனைத்து மாவட்ட, ஆதார மற்றும் பிரதேச வைத்தியசாலைகளுக்கு இவ்வாறு 101 வைத்தியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நியமனம் அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் ஒரு தொகுதி வைத்தியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# உரிய பொறிமுறைகளை மேற்கொள்ளாது விமான நிலையம் திறப்பது ஆபத்தானது!

உரிய பொறிமுறைகளை மேற்கொள்ளாது நாட்டை மீளத்திறப்பது ஆபத்தானது என பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக மீள விமான நிலையத்தைத் திறக்க எதிர்பார்த்துள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டத்தை அதிகாரிகள் கண்காணிப்பது மிக முக்கியமானது எனவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

விமான நிலையத்தை மீளத்திறப்பது தொடர்பில் அரசாங்கம் நீண்டகாலமாக ஆராய்ந்து வருகின்றது. உரிய நடைமுறைகளுடன் அதனை மீளத்திறப்பதில் எந்தவொரு சிக்கலும் இல்லை என பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் எம்.பாலசூரிய ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

வி.வி.ஐ.பி. தவிர்ந்த ஏனைய சுற்றுலாப்பயணிகள் அனைவரும் இலங்கையின் தனிமைப்படுத்தல் விதிகளை தங்கள் தூதரகங்கள் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை முகவரகம் ஊடாக அறிந்திருத்தல் அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர் பகுதியில் 44 வீதம் வனத் திணைக்களத்திடம்!

## சாள்ஸ் தெரிவிப்பு

வன திணைக்களம் தமிழர் பகுதிகளில் 44 வீதத்தை தம்வசப்படுத்தியுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இதனால், தமிழ் மக்கள் விவசாயம் செய்ய முடியாத நிலைமை உருவாகியுள்ளதாக அவர் நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் கால்நடை பண்ணையாளர்கள் அதிகமாக உள்ளனர்.

இவ்வாறு இருக்கையில் கால்நடைகளைத் தடைசெய்து அவர்களின் வாழ்வாதாரத்தை நாசமாக்க இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், தமிழர் பகுதிகளில் மணல் அகழ்வு ஒரு மாபியா போன்று முன்னெடுக்கப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு தமிழ் மக்களின் நிலங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

# கிராம அபிவிருத்தி திட்டம் 14 முதல் மீண்டும் ஆரம்பம்

## பிரதமர் மஹிந்த அறிவிப்பு



நாட்டின் கிராமப்புற மக்களின் உண்மையான தேவைகளையும் முன்னுரிமைகளையும் அடையாளம் காணும் பொருட்டு புதிய திட்டமான வேலையோடு மீண்டும் கிராமத்துக்கு' (வெட சமக யலி கமட) செயற்திட்டத்தை 14ஆம் திகதி முதல் தொடங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

நிதி அமைச்சின் ஆலோசனைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய பிரதமர், இந்தத்திட்டத்தை முறையாக அடையாளம் கண்டு, கிராமப்புற மற்றும் புறநகர்ப்புறங்களில் உள்ள மக்களின் உண்மையான தேவைகளையும் அடையாளம் கண்டு இந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கிராமப்புற மற்றும் புறநகர்ப்புறங்களில் உள்ள 72 சதவீதம் இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தில் சாதகமான மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பதோடு அதிகாரத்துவத்துக்கு அப்பாற்பட்டு பொதுமக்களின் முன்னுரிமைகளுக்கு அவசியம் அளிக்கப்பட வேண்டும் என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டாராவின் பரிந்துரைக்குப் பதிலளிக்கும்போது இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இதன்போது நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர் எஸ். ஆர். ஆர்ட்டிகல குறிப்பிடும்போது, சம்பந்தப்பட்ட இடங்கள் தொடர்பாக அரசு நிறுவனங்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பு காணப்பட வேண்டும் என்றார்.

இதன்படி, நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் ஹொரன் சேமசிங்க ஆகியோரின் உதவியுடன் முன்னுரிமைகள் பட்டியலைத் தயாரிக்க அமைச்சின் செயலாளர் இதன்போது ஒப்புக்கொண்டார்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக நாட்டில் சுற்றுலாத்துறை பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதால் நிதி அமைச்சு விரைவில் குறித்த விடயத்திற்கு உதவி வழங்க வேண்டும் என்று அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக நிதி அமைச்சு எடுத்த பல நடவடிக்கைகளை இதன்போது அமைச்சின் செயலாளர் குழுவுக்கு விளக்கினார்.

# முல்லை மாவட்ட சுகாதாரப் பணிப்பாளராக வைத்திய கலாநிதி உமாசங்கர் பதவியேற்பு!





முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி மு.உமாசங்கர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ. கேதீஸ்வரன் அனுப்பிய கடிதத்துக்கு இணங்க அவர் நேற்று (திங்கட்கிழமை) கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

வைத்திய கலாநிதி மு.உமாசங்கர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ நிர்வாகத் துறையில் பட்டமேற்படிப்பு நிர்வாகக் கலாநிதி கற்கை நெறியைப் பூர்த்தி செய்து தற்போது வெளிநாட்டு மேற்படிப்பை சிங்கப்பூரில் முடித்துக்கொண்டு கடந்த மாதம் மீண்டும் நாடு திரும்பியிருந்தார்.

இவர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகராகவும் கடமை புரிந்துள்ளார்.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பொறுப்பேற்கும் படி வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரனால் கடிதம் வழங்கப்பட்டிருந்தது.

அதன்பிரகாரம், வைத்தியகலாநிதி மு.உமாசங்கர் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

# தனிமைப்படுத்தல் விதி மீறல்: 1,151 பேர் கைதாகினார்கள்!

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 151 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை கடைப்பிடிக்காத 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாந்தை மேற்கு கிராம அலுவலர் கொலை: சந்தேக நபருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

மாந்தை மேற்கில் கிராம அலுவலர் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் எம். கணேசராஜா நேற்று (திங்கட்கிழமை) உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மாந்தை மேற்கில் கொலை செய்யப்பட்ட கிராம அலுவலகர் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று, மன்னார் நீதிமன்றத்தில், நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே சந்தேகநபரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார். கடந்த தவணையின்போது இந்த வழக்கு விசாரணை பொலிஸாரிடம் இருந்து சி.ஐ.டி.யினருக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று மன்றில் முன்னிலையான குற்றப்புலனாய்வு பிரிவு, பல்வேறு தரப்பினரிடம் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைவாக அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் சுருக்க குறிப்பினையும், மூன்று சான்றுப் பொருள்களையும் மன்றில் பாரப்படுத்தியுள்ளனர்.

கிராம அலுவலகர் கொலை செய்யப்பட்டபோது பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், மோட்டார் சைக்கிளின் உடைந்த கைப்பிடி, கருப்பு நிற தலைக்கவசம் (கெல்மட்) ஆகிய மூன்று சான்றுப்பொருள்களும் இவ்வாறு மன்றில் பாராப்படுத்தப்பட்டன.

மேலும் குற்றப்புலனாய்வு பிரிவினர் தொடர்ந்தும் தமது விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும், அதற்கு தமக்குப் போதிய அளவு கால அவகாசம் தேவை எனவும் மன்றில் தெரிவித்தனர். இந்நிலையில் இந்த சந்தேகநபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கு மாறு மன்னார் நீதிவான் எம்.கணேசராஜா நேற்று உத்தரவிட்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2020 இல் வெளியிடப்பெற்றது.